# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,040 — 1934 ம் ஹூ பங்குனிமீ 23 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

#### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 740 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விபரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைதக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ஹூ (மாச்) பங்குனிமீ 23 ந் தேதியிலிருந்து மூன்று மாசகாலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிபடுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1934 ம் ஹூ (ஜனவரி) தைமீ 23 ங் தேதியிலன்று கண்டிக் கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்தியமாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகாத்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், பாததும்பற பகுதி, பலிஸ்பத்து மேற்கு கோறளையிலுள்ள ஈாறன்பனுவ என்னுங் கிராமத்திலுள்ள பின்வருங் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் இல. 8,297.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | பஞ்சனீயகென (எலாவோடு சேமித்தது) | 0 | 0 | 3 |
| 2 | பஞ்சனீயகென .. .. | 0 | 0 | 8 |
| 3 | ஷை (டி. ஆர். சி. ரோட்டோடு சேமித்தது) .. | 0 | 1 | 7 |
| 4 | பஞ்சனீயகென (டீ. ஆர். சி. ரோட்டோடு சேமித்தது) .. | 0 | 0 | 20 |
| 8 | ஷை ( ஷை ) | 0 | 0 | 22 |
| | | 0 | 2 | 30 |

எல்லைகள் : வடக்கு-ரோட்டு, எலா, கன்சபாவ பாதை, உக்குமெனிக்கா உரித்தாடும் கொலொன்ககேனவத்த ; கிழக்கு-கன்சபாவபாதை, முடியால் விற்கப்பட்ட பஞ்சனீயகென (பி. ப. 8,297/5), றன்மெனிக்காவாலும் பிறராலும் உரித்தாடப்படும கடவக்கெசென, முடியால் விற்கப்பட்ட பஞ்சனீயகென (பி. ப. 8,297/6) ; தெற்கு-முடியால் விற்கப்பட்ட பஞ்சனீயகென (பி. ப. 8,297/6), முடி உரித்தாடும் பஞ்சனீயகென (8,297/7A) ; மேற்கு-அமுனெஎலா.

---

#### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி, 741 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோஙதைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ஹூ (மார்ச்) பங்குனிமீ 23 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணய சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1934 ஹூ (ஜனவரி) தைமீ 23 ந் தேதியிலன்று கண்டிக் கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏசன்ற், கண்டி.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்தியமாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(*b*) இக்காணிக லெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், பாதகேவகெத்த டிவிசன், கந்தாகெ கோறளை தெற்கில் கப்புலியத்த கிராமத்திலுள்ள பின்வருங் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் இல. 8,145.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 5 | கப்புலியத்தெபத்தன .. .. | 2 | 0 | 11 |
| 7 | ஷை .. .. | 16 | 2 | 12 |
| 7A | ஷை (இடுகாட்டோடு சேமித்தது) .. | 0 | 3 | 0 |
| 8 | ஷை .. | 0 | 3 | 14 |
| 9 | ஷை .. .. | 10 | 0 | 10 |
| | | 30 | 1 | 7 |

எல்லைகள் : வடக்கு-அ. று. ரு. நாச்சியப்பர் உடையாரால் உரித்தாடப்படும் மீளுட்சிதோட்டம் அல்லது உடையாரம் தோட்டம், எஸ். எம். நாறணியால் உரித்தாடப்படும் கமடிவெலாவத்த, அ. று. ரு. நாச்சியப்பர் உடையாரால் உரித்தாடப்படும் மீளுட்சிதோட்டம் அல்லது உடையாரம் தோட்டம், உரிமைப்படம் 356,717 ல் விவரிக்கப்பட்டிருக்கும் நிலம், ரி. பந்துவாலும் பிறராலும் உரித்தாடப்படும் கப்புலியத்தெபத்தனகேன ; கிழக்கு-டி. எம். அப்புகாமியால் உரித்தாடப்படும் கப்புலியத்தெபத்தனகேன, எ. கிரிகாமியாலும் பிறராலும் உரித்தாடப்படும் வறக்காவல்லகேன, முத்துமெனிக்காவால் உரித்தாடப்படும் வறக்காவல்லகென; தெற்கு-கே. சிருலையால் உரித்தாடப்படும அலியவத்தனவத்த, ஆர். எம். கிரிபண்டாவால் உரித்தாடப்படும் ககலகலாவவத்த, முடியால் தீர்த்துக் கொடுக்கப்பட்ட ககலகலாவபத்தன (பி. ப. 8,145/6), கன்சபாவ ரேட்டு, உரிமைப்படம் 123,387 ல் உரித்தாடப்படும் நிலம், டுல்முறெ கிராமத்தின் எல்லை ; மேறகு-ஆர். எம். பி. எல். கோபாலசாமியால் உரித்தாடப்படும் வீன்கொல்லகேன.

---

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 742 (கண்டி).

இதனோடணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ஆண்டு (மார்ச்) பங்குனிமீ 23 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச்சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய, சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1934 ம் ஆண்டு (மார்ச்) பங்குனிமீ 16 ந் திகதியிலன்று கண்டிக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும்மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், பாதஹேவகெத்த பகுதி, கந்தாகெ கோறளை தெற்கிலுள்ள டுல்முறெ என்னும் கிராமத்திலுள்ள பின்வருங் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் இல. 8,145.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | கப்புலியத்தெபத்தன, (காற்பாதையோடு சேமித்தது) .. | 0 | 0 | 6 |

எல்லைகள் : வடக்கு-கப்புலியத்தக் கிராமஎல்லை ; கிழக்கு-129,348 ம் இல. உரிமைப்படத்தில் விவரித்திருக்கும் நிலம்; தெற்கு-முடியால் தீர்த்துக் கொடுக்கப்பட்ட கப்புறுககாமுலவத்த (பி. ப. 8,145/2) ; மேற்கு-187,577 ம் இல. உரிமைப் படத்தில் விவரித்திருக்கும் நிலம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 743 (மட்டக்களப்பு).

இதனோடணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிக்கேனும் அல்லது அதன் எப்பங்குக்கேனும் அல்லது எச்சோங்கைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ஷு (மார்ச்) பங்குனிமீ 23 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள், இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1933 ம் ஷு (டிசெம்பர்) மார்கழிமீ 2 ந் தேதியிலன்று மட்டக்களப்புக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

வே. குமாரசுவாமி,
அரசினரின் கீழ் மாகாண அதிபர்.

குறிப்பு.—(*a*) இக்காணியைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் அரசினரின் கீழ் மாகாண அதிபரிடமும் அதன் அளவைப்படம் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணியிலுள்ள வழியுரித்து இக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

கீழ் மாகாணம், மட்டக்களப்பு டிஸ்திறிக், கரைவாகுப் பற்று துரைநீலாவணை தெற்குக் கிராமத்திலிருப்பதும் பின் சொல்லப்படும் எல்லைகளுக்குள்ளிருப்பதுமான கீழ்கண்ட காணித்துண்டு :—

வடக்கு-பிரதமப்படம் இல. 6,802 ல் 2 ம், 1 ம் இலக்கக் காணித்துண்டுகள் ; கிழக்கும் தெற்கும்-ஆள்வான்குளம், முடியால் உரித்தாடப்படுகின்றது ; மேற்கு-ஆள்வான்குளத்துப்பூமி, முடியால் உரித்தாடப்படுகின்றது.

பிரதமபடம் இல. 6,802.

| காணித துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 3 | ஆள்வான்குளத்துப்பூமி .. | 2 | 1 | 25 |

---

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 744 சிலாபம்).

இதனோடணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அல்லது எப்பங்குக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ஷு (மார்ச்) பங்குனிமீ 23ந் தேதியிலிருந்து மூன்று மாசகாலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக் காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்தில் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1933 ம் ஷு (நொவெம்பர்) கார்த்திகைமீ 21 ந் திகதி புத்தளம் கச்சேயிரில் கையொப்பமிடப்பட்டது.

ஏ. ஈ. கிறிஸ்தோபஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விபரத்தை புத்தளம் உதவி அரசாட்சி ஏசண்டவர்களிடமும் அவைகளின் படங்கள் அளவைக் கந்தோர் தலைவரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ் வக் காணிகளுக்குள்ள உரித்தாமென அறிந்துகொள்க.

அட்டவணை.

வடமேன் மாகாணம், சிலாபம் டிஸ்திறிக்கின் பிற்றிக்கல் கோறல தெற்கு, மெடபலாத்தை, டுன்கன்னுவ தீவு கிராமத்திலுள்ள பின்வரும் காணித்துண்டுகள் :—

பிரதமப்படம் இல. A 35.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | கென்டகல .. .. | 6 | 0 | 39 |
| 2 | மினிபிற்றனிய .. .. | 2 | 2 | 21 |
| | | 8 | 3 | 20 |

இவற்றின் எல்லைகளாவன : வடக்கு-ஸ்ரேட்டுக்காக சேமிக்கை,(முடிக்குரிய) காணியும் டீ.பீ. 137,997; கிழக்கு-எச். எச். அல்லிஸ் அப்புவால் உரித்தாடப்பட்ட காபாகும்புறபில்லவையும், ஆர். ஏ. வீரசூரிய உரித்தாடப்பட்ட டங்க காணிறையும்; தெற்கு-மாருவிலிருந்து கத்திருபிற்றியவுக்கு போகும் ஸ்ரேட்டும்; மேற்கு-டீ. பீ. 138,001 சொல்லப்பட்டகாணியும்.

குறிப்பு.—2 ம் துண்டுக்கூடாக ஊர்மனைக்குப் போகும் பாதை இந்த அறிவித்தலில் நீக்கப்பட்டிருக்கிறது.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1911 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் 3 ம் பிரிவினுல் திருத்தப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டின் 3 ம் சட்டத்தின் 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மாட்சிமை தங்கிய தேசாதிபதியவர்கள் ரொறிங்ரன் அவெனியுவைப் பெருப்பித்தலாகிய ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்சொல்லப்படும் காணிகளை எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் :

பிரதமபடத்து இலக்கம் A 88. வெள்ளவத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பெலங்காகாஓவிர அல்லது குருந்துகாகாஓவிர, ரொறிங்ரன் அவெனியு வரிப்பண இலக்கம் 215 உள்ள காணியின் ஒரு பகுதி | தென்னந்தோட்டம், 25–30 வருஷ தென்னமரம் 4 ம், புல்லுத் தோட்டமும் உளது | ஸ்ரீமதி எச். என். எச். யலால்டீன், மேற்பார்வை, கொழும்பு, கோல்பேஸ் சேர்ச் ஸ்ரேட் 40/1 இலக்கததிலிருக்கும் ஈஸ்ரேர்ன் மோட்டர் கஹ்ச் | 0 0 20·63 |
| 2 | கணேவிலா ஓவிர அல்லது கிந்த ஓவிர, ரொறிங்ரன் அவெனியு வரிப்பண இலக்கம் 130 உள்ள காணியின் ஒரு பகுதி | புல்லுத்தோட்டம் .. | திம்பிறிகசயாவிலிருக்கும் கே. டி. ஜே. மாட்டின், கே. டி. ஜே. அல்வேட், கே. டி. ஜே. மார்சல், கே. டீ. ஜே. எல்கெல்மினுவும் (சொரியல்) | 0 0 21·48 |
| 5 | குருந்துகாகாஓவிர, ரொறிங்ரன் அவெனியு வரிப்பண இலககம் 150 உள்ள காணியின் ஒரு பகுதி | தென்னந்தோட்டம், 3 வருஷ தென்னம்பிள்ளைகள் 2 ம், 15 வருஷ கமுக மரங்கள் 2 ம், புல்லுத் தோட்டமும் உளது | திம்பிறிகசயாவிலிருக்கும் டபிள்யு. பி. பொற்றேச்சு | 0 0 4·37 |

மேற்சொல்லப்பட்ட காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஆண்டு (மே) வைகாசிமீ 8 ௳ திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொழும்பு நகரசங்கக கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடநதைகளின் தன்மைகளும், அவ்வுடந்தைகளுக்காக கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்றும் உறுதிகளாலும், பதிவு கொப்பிகளாலும் எனக்கு அத்தாட்சிப்பண்ணி அக்காணிகளிலுள்ள உடந்தைகளின் தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நகரசங்க கந்தோர்,
கொழும்பு, 1934 ம் ௵ மார்ச்மீ 23 ௳ திகதி.

டபிள்யு. எல். மோர்வி,
நகரசங்க சபாநாயகரும், கொழும்பு நகரதிகாரியும்.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நீர்கொழும்பு நகரசங்கக் காந்தக்கம்பிக் கந்தோர் ஆபிசுக்கும் தளபாடசாலைக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லட்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 284. குறிச்சி—டோபீஸ்லேன், நீர்கொழும்பு.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | காணி இறைவரி இமக்கம் 1 துவங்கி 12 வரையுமுள்ளது (டோபீஸ் லேன்) | சோட்டம், 15 தென்னையும், 1 தோடையும், 1 கித்துலும், 1 பருத்தியும், 3 ஓடுடால் வேய்ந்த வீடும், 2 தகரக் குசினியும், 1 தகரக்கூரைக் குசினியும், 1 கட்டிடத் தகரக்கூரை கற்கூசுமுள்ளது | பி. பி. மொகமெட் 3 ம் நம்பர், டீன்ஸ் ஸ்ரேட்டு, மருதானை | 0 1 11 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ௵ வைகாசி மாசம் 5 ௳ தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1934 ம் ௵ பங்குனிமீ 19 ௳.

கார்ள் ஈ. ஆண்ட்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் களுத்துறை வடக்குச் சொயபாஷைக்குரிய ஆண் பாடசாலைக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 272. குறிச்சி—டெசாஸ்திற களுத்துறை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொடகதுறுகாகவத்தை பகுதி, இலக்கம் 7, கோவில் தெரு, சோலை வரி இலக்கம் 38 | ஒருவருட வயசுள்ள 1 பலாமரம், தாவரவர்க்கம், ஓடுபோட்டு மேசன்வேலைசெய்யப்பட்ட ஒரு கட்டடம், மேசன்வேலை ஆதாரமாக நியூப் போட்ட கிணறு, மேசன்வேலைசெய்யப்பட்ட கற்கூஸ் (கூரை இல்லாமல்) அடங்கிய தோட்டம் | பொடியபடுகே மைக்கேல் பிரான்சிஸ் பெரேரு சூணறத்தினு, கொழும்பு | 0 1 35 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஆண்டு சித்திரை மாசம் 16 ந் தேதியிலன்று காலை 10·30 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் ததமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறை கச்சேரி,
1934 ம் ஆண்டு பங்குனிமீ 19 ந் உ.

பீ. சரவணமுத்து,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வலிதுறையில் மார்க்கெட் கடை கட்ட என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லபடும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 143. குறிச்சி—கள்மன்கொட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | அத்தளவத்த அல்லது வாப்புகேவத்த | தென்னங்காணி, 20 தென்னமரம், 8 ஈரபிலா மரம், 2 வெலிஆதமரம், 2 தொம்பமரம், 1 கொட்டம்பமரம் | (1) ஏ. ஆர். வீரசூரிய, (2) எம். எதன்குனசேகர, (3) ஏ. மெடொன்ஸ | 0 1 24·9 |
| 2 | புஞ்சிமறக்களபிடியவத்த அல்லது வாப்புகேவத்த | தென்னங்காணி, 4 தென்னமரம், 9 கண்டுமரம், 1 வாளபந்துற | (1) மு. பா. லெ. அப்துல் ஹமீது, (2) ஹாசி அப்துல் றஹிமான் செய்னடீன் | 0 0 9·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஆண்டு ஏப்றில் மாசம் 24 ந் தேதியிலன்று 10 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் ததமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1934 ம் ஆண்டு மார்ச்சுமீ 16 ந் உ.

ஜே. டீ. பிறவுண்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வெல்லமடம என்னும் கிராமத்தில் ஒரு தச்சுப் பள்ளிக்கூடம் ஸ்தாபித்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 152. குறிச்சி—வெல்லமடம், நாலுகிருவெற்ஸ், மாத்தறை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | முடில்லகஹவத்தை | 20 வயதுள்ள 7 தென்னமரங்களும் 2 வயதுள்ள ஒரு தென்னங்கன்றுமுள்ள தோட்டம் | என். பீ. ஹென்றிக்சிங்கோ, வெல்லமடம, டொன்ற | 0 2 3·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஆண்டு மே மாசம் 3 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் ததமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1934 ம் ஆண்டு மார்ச்சுமீ 14 ந் உ.

எல். எல். ஹண்டர்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 8 ம் பிரிவிற் சுட்டிய 1 ம் அட்டவணையின் B. பிரிவின்படி அறிவித்தல்.

மட்டுக்களப்பு தாமரைக்கேணி அம்பலவாணர் கணேசமுதலி ஆகிய நான் என்னை மட்டுக்களப்பு டிஸ்திறிக்கிலே தமிழ்ப் பாஷையில் வேலைபார்க்கும் நொத்தாரிசுவாக ஏற்றுக்கொள்ளும்படி இன்று தொடக்கம் மூன்று மாசங்களுக்குப் பின் பதிவுகாரியஸ்த தலைவர் அவர்கட்கு விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

தாமரைக்கேணி, மட்டுக்களப்பு,
1934 ம் ஆண்டு மாசிமீ 22 ந் உ.

அ. கணேசமுதலி.

GP 8589